بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# FRIDAY SERMON 22/08/2014

## வெள்ளிக்கிழமை குத்து.்.பா 22-08-2014

# Surah Al-Fatiha: A Short Explanation

## சூரா அல் பாத்திஹா- ஒரு சிறு விளக்கம்

## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (atba)

அனைத்து மக்களுக்கும் சமாதான வாழ்த்து தெரிவித்தபின் தஷ்ஹீத்தும் தஅவ்சும் அல்பாத்திஹாவும் ஓதி ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ் வருமாறு கூறினார்.

நான் இன்று தேர்ந்தெடுத்திருக்கின்ற விஷயம் ஒரு பொழுதும் முடிவில்லாத ஒரு விஷயத்தைக் குறித்து விளக்கமளிப்பதறகாகும். சமுத்திரம் மையியாகாவும் இந்த பிரபஞ்சத்தில் காண்கின்ற செடி கொடிகள்யாவும் எழுது கோல் ஆகவும், ஆகாயவும் பூமியும் பேப்பர்கள் ஆகவும் செய்தாலும், இவையனைத்தும் முடிந்துக் கொள்ளுமேயன்றி சூரா அல் பாத்திஹாவின் விளக்கத்தை முழுமைப்படுத்திட ஒரு பொழுதும் இயலாது என்று சந்தேகமின்றி எனக்கு கூறிடமுடியும். ஒரு நம்பிக்கையாளரை பொறுத்த வரையில் இந்த அதிகாரத்திற்கும் அவனது வாழ்விற்கும் மிக பெரிய, முக்கியமான தொடர்பிருக்கின்றது. இது திரு குர் ஆன் முதல் அதிகாரமாகும். ஒரு நம்பிக்கையாளர் அவனது தொழுகையினை ஆரம்பிக்கின்ற போது சூரா அல் பாத்திஹா ஓதிக் கொண்டே துவங்குகின்றார். அல்லாஹ்விடத்தில் து ஆ செய்வதற்கு ஆரம்பிக்கின்ற வேளைகளிலும் சூரா பாத்திஹா ஓதி கொண்டே துவங்க வேண்டும். ஒரு அதிகாரம் என்ற நிலையிலும் அதற்கு மிக மகத்தான இடமுண்டு. ஒரு நபர் அவர் எதிர் கொள்கின்ற ஏது சூல் நிலையிலும், கவலை வேளைகளிலும், நோய் நிலையிலும், துயரகட்டங்களிலும் அல்லது வேறு ஏது வகைப்பட்ட பிரச்சனைகளை எதிர் கொள்ளும் நிலையிலும் அதில் இருந்துள்ள மிட்பிற்கும் தீர்வுக்கும் சூரா அல்பாத்திஹா ஓதிக் கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் இன்று 22 ஆகஸ்ட் 2014. மிக முக்கியமுடையதான இந்த அதிகாரத்தைக் குறித்து மேலும் சிறு விளக்கமளிக்கலாம் என்று எண்ணினேன்.

சூரா அல்பாத்திஹாவை விளக்கினால் அதற்கு ஒரு முடிவிருக்காது என்று எனக்கு தெரியும். எனக்கு பிறகும் நூற்றாண்டுகள் வழியாக இறைவனால் தோற்றுவிக்கின்ற எராளமான முஜத்தீதுகள் கலீ.்.பத்துல்லாக்கள், இறை மனிதர்கள் இந்த சூரத்திற்கு விளக்கமளித்துக் கொண்டேயிருப்பர்கள். அவ்வகையிலான ஒரு சூராத்தேயாகும் இந்த அல் பாத்திஹா.

‘‘பாத்திஹா’’ என்ற வார்த்தை ‘‘பதஹா’’ என்னும் சொல்லின் இலக்கண வடிவாகும். அதன் பொருள் ‘‘திறக்குதல்’’ என்றாகும். அல்பாத்திஹா சூரா என்று கூறும் போது அதற்கு ‘‘திறக்கின்ற அதிகாரம் என்று அர்த்தம். குர் ஆன் ஆரம்பிக்கின்றது. காரணம் இந்த சூரா திரு குர் ஆனில் முதலாக வருகின்றன. அதவாது குர்ஆன் திறந்துக் கொள்ளும் போது, மிக முக்கியமான ஒரு சாவி, குர் ஆனை திறந்துக் கொள்ள உங்களுக்கு தேவைப்படுகின்றது. ஒரு சாவி என்ற நிலையில் அதற்கு மிக முக்கியத்துவம் இருக்கின்றது. காரணம் இது சதாரணமான சாவியின்றி உங்களின் இதயத்தை, உங்களை படைத்தவனின் முன் திறந்து வைக்கும் ஒரு சாவியாகும். உங்களுக்கு அவனிடம்

எவ்வளவு அன்பு உண்டு என அது பரிசோதிக்கின்றது. உங்களை பாது காப்பவனை அங்கீகரித்துக் கொள்ள அது உங்களை ஆயத்தமாக்கின்றது. விதி நாளின் உரிமையாளர் என்ற நிலையில் நாம் அவனை மட்டுமே வணங்குகின்றோம். அவனிடம் மட்டுமே நாம் பாவ மன்னிப்பினை தேடுகின்றோம். அது மட்டுமின்றி சூரா அல்பாத்திஹா மூலமாகவே நமது தொழுகையை ஆரம்பித்துக் கொள்ளுகின்றோம் அல்லது திறந்துக் கொள்ளுகின்றோம். தொழுகையில் நாம் முதலாவதாக ஓதிக் கொள்வதும் அல்பாத்திஹாவேயன்றி வேறில்ல.

பாத்திஹாவுக்கு இரண்டு கையும் உயர்த்திக் கொள்தல் என்று பொருள் இல்லை. நமது முஸ்லீம் சகோதரர்கள் அவர்களின் கைகளை உயர்த்திக் கொள்வதை நாம் காண்கின்றோம். அதற்கு அவர்கள் பாத்திஹா என்று கூறுகின்றன. தொழுகையில் உங்களின் கைகளை உயர்த்திக் கொண்டு நீங்கள் அல்லாஹ்வின் முன் பிராத்தனை செய்ய ஆரம்பித்துக் கொள்ளுங்கள் என்ற அறிகுறியாகலாம் அவர்கள் அது மூலமாக வழங்கி கொள்வது. காரணம் இது பிராத்தனையின் சாவியாகும்.

சூரா அல்பாத்திஹா வழியாகவே ஒருவரின் பிராத்தனை ஆரம்பித்துக் கொள்வது. ஆனால் பல வேளைகளிலும் மனிதர்களுக்கு இது புரிந்துக் கொள்வதில்லை. ஒவ்வொருவருக்கும் அவர்களுடையதான பிரகடனமுறைகள் இருக்கின்றன. ஒருவர் அதைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் போது அதற்குள் ஆழம் வாய்த்த பொருள்கள் இருக்கும். நமது மற்று முஸ்லீம் சகோதரர்கள் (அஹ்மதிகள் அல்ல) கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். அவர்கள் கை உயர்த்திக் கொண்டு பாத்திஹா என கூறுவதுண்டு. நமக்கு துஆ செய்வோம் என்ற பொருளில் ஆனால் சிலர் அதை பரிகசிப்பதுண்டு.

பரிகசித்துக் கொள்கின்றவர்கள் கூறுவது பாத்திஹா ஓதுங்கள் என்று சொல்வது சுயவிருப்பத்திற்காகவே ஆகும் என. இதை நமக்கு மாற்றிவைப்போம். ஒருவர் பாத்திஹா என்று கூறினால் அங்கு கூடியிருக்கின்ற ஒவ்வொரு நம்பிகையாளர்களும் புரிந்துக் கொள்வது, குறிப்பாக அஹ்மதியா முஸ்லீம்களான நம்மை பொறுத்தவரையில் நாம் புரிந்துக் கொள்வது து ஆ செய்வோம் என்றாகும். து ஆ செய்வோம் என்று கூறினால் அதென்ன வென்று தெரியாத எராளமான மக்கள் உண்டு. அவர்கள் புரிந்துக் கொள்ளட்டும், சூரா அல்பாத்திஹா வழியாகவே து ஆ ஆரம்பித்து கொள்ள வேண்டியது. பாத்திஹா என்று கூறினால் அதற்கு கை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றல்ல பொருள். என்றிருந்தாலும் து ஆ செய்துக் கொள்வதற்காக அல்லாஹாவின் முன் கை உயர்த்திக் கொள்வது அனுமதிக்கப்பட்டதேயாகும். தொடர்ந்து அல் பாத்திஹா ஓதிட வேண்டும்.

சூரா அல்பாத்திஹாவுக்கு மற்றும் பல பெயர்கள் உண்டு. சூர் ஆனின் அன்னை. ஒரு அன்னை என்றால் யார்? ஒரு அன்னை வழியாகவே தான் ஒரு தலை முறை உருவாகி கொள்வது, ஒரு குடும்பம் தோன்றுவது, ஒரு தாய்க்கு ஒன்றோ அதற்கு அதிகமோ ஆன பிள்ளைகள் இருப்பார்கள். முதல் குழந்தையில் இருந்து ஆரம்பிக்கின்றது. பிறகு இரண்டாவது குழந்தை அப்படி எண்ணம் அதிகரித்து வரலாம். குழந்தைகள் பிறப்பதோடு அக்குழந்தைகளுக்கான பாதுகாப்பு மேற் கொள்ளப்படுகின்றன. ஒரு கோழியின் உதாரணம் மூலமாக அல்லாஹ் உவமை வடிவில் இவ்விஷயத்தை மிக தெளிவாக்கி கொள்கின்றான். எதாவது இயற்கை சிற்றம் காரணமாக (மழையோ சூரிய தாப அதிகரிப்போ பகிரங்கமான இருள் காரணம்மாகவோ) அபாயப்பட்டு விடாமால் இருக்க தனது குஞ்சுகளை தாய் கோழி தன் சிறகின் உள் மூடி மறைத்து பாதுகாக்கின்றது. ஒரு தாயைப் பொறுத்த வரையில் அனுகூலமோ அல்லது எதிர் கூலமே ஆன எந்த சூழ்நிலையில் ஆனாலும் சரி தன் குழந்தைகளை பாதுகாக்கின்றாள். அதை போன்றே சூரா அல்பாத்திஹா என்பது திரு குர் ஆனின் தாய் ஆகும். அதொரு மிகப் பெரிய விஷயமாகும். சூரா ‘‘அல்பாத்திஹா’’வுக்கு பிறகு ‘‘சூரா அல் பக்கரா’’ (பசு) ஆரம்பிக்கின்றது. ஒரு பசு என்ன வழங்கி கொள்கின்றது? பால். ஒரு பெண் ஒரு குழந்தையைப் பெற்று விட்டு தாய்யாகிவிட்டால் அத்தாய் முதல்மையாக தனது குழந்தைக்கு பால் ஊட்டுகின்றாள். பிறக்கும் குழந்தைக்கு தாயின் பால் மிக முக்கியத்துவம் வாய்ந்த தாகும். அக்குழந்தையின் வளர்ச்சிக்கு அது மிக தேவை

வாய்ந்தாகும். கார்ட்டுணுகணில் பால் எல்லா பகுதியிலும் விற்ப்பனை செய்யப்பட்டுகின்றன. அந்த பால்களின் தன்மையினை ஒரு பொழுதும் தாய் பாலுமாக ஒப்பிட்டுக் கொள்ள இயலாது. மட்டுமின்றி தாய் பாலுக்கு பணம் செலவு செய்ய வேண்டிய தேவையில்லை. அதை போன்றே சூரா அல் பாத்திஹா குர் ஆனின் தாய் ஆகும். அதற்கு பிறகு வருகின்ற அதிகாரம் பால் ஆகும். அதவாது சூரா அல் பாத்திஹாவுக்கு பிறகு வருவது பசு (பக்கரா)என்ற அதிகாரம் ஆகும். அது நமக்கு பால் வழங்கி கொள்ளுகின்றது. பல தரப்பட்ட நோய்களின் இருந்து இரட்சிப்பு கிடைக்கும் மருந்தாகும் பால். அல்பாத்திஹாவை மற்றும் சில பெயர்களில் அழைக்கப்படுகின்றன. நோய் தீர்க்கும் மருந்து, புகழ், திருப்தி வழங்குவது, குர் ஆனின் அடி தூண், போன்ற பல பெயர்களிலும் அதை அழைக்கப்படுகின்றன.

அந்த அதிகாரத்தில் நோய்க்கான விடுதியிருக்கிறது. ஒரு தடைவை ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்களின் சில தோழர்கள் பயணம் செய்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒரு ஊரை சென்றடைந்தன. ஆனால் அந்த ஊரை சார்ந்த மக்கள் அவர்களை அதிதிகளாக ஏற்றுக் கொள்ள மறுத்ததன் காரணமாக தோழர்கள் அந்த இடம் விட்டு நகர்ந்தனர். ஆனால் அந்த இடத்தை சோர்ந்த மக்களின் தலைவர் நோய்யாளராக மாறி விட்டார். பல வகைப்பட்ட சிகிச்சை செய்யப்பட்ட பின்னும் நோயில் இருந்து விடுப் பெறவில்லை. முடிவில் அவர்களின் தலைவரின் சிகிச்சைக்காக முஸ்லீம்க்களின் உதவி அம்மக்கள் தேடிக் கொண்டனர்.

அவர்கள் அனைவரும் வந்தனர். அதில் ஒருவர் நோய்யாளியின் மீது அல் பாத்திஹா ஓதினார். அல் பாத்திஹாவின் அருளால் அவர் நோயில் இருந்து விடு பெற்றார். அம் மக்கள் முஸ்லீகளுக்கு பரிசாக ஒன்றோ அதில் அதிகமோ ஆன ஆடுகளை வழங்கினார்கள். அவர்கள் பரிசுகளை பெற்றுக் கொண்டனர். ஆனால் அதனை தின்பதற்கு முன் அதனை தின்பது ஹலாலான விஷயம்தானா என்று திரு நபி (ஸல்) விடம் கேட்க எண்ணினார்கள். திரு நபி (ஸல்) அவர்கள் கூறினார். அது தின்பது உங்களுக்கு ஹலாலேயாகும். அதில் கொஞ்சம் எனக்கும் தரவேண்டும். அந்நிலையில் கொஞ்சம் ஆட்டின் இறச்சி திரு நபிக்கு தேவையில்லை என்பதே உண்மை. ஆனாலும் அந்த இறச்சி ஹலால் என்று அவர்களை கற்ப்பிப்பதற்காவே அவ்வாறு செய்தார். (முஸ்லீம், புகாரி, அபூதாவூத்)

ஒரு குத்சியான ஹதிஸில் முஹமது (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்.

**‘‘சூரா அல் பாத்திஹவின் பொருள் குர் ஆனின் அன்னை என்றாகும். அதில் தொடர்ந்து ஓதிட ஏழு வசனங்கள் அடங்கியுள்ளது. அது மகத்துவமுடைய திரு குர் ஆனின் இதயமாகின்றது’’.** (அஹ்மது).

செய்தினா உபாதா இப்பினு அஸ்ஸாமித் (ரலி) அவர்கள் ரிப்போர்ட் செய்கின்றார்கள். திரு நபி (ஸல்) கூறினார்.

**‘‘பிரவேசன அதிகாரமான சூரா அல் பாத்திஹா ஓதிக் கொள்ளவில்லை யென்றால் அது தொழுகையல்ல’’** (புகாரி, முஸ்லீம்)

இது மிக நீண்ட காலமாக நான் கூறிவரும் ஒரு விஷயமேயாகும். முன் காலத்தில் நான் பார்த்ததுண்டு, அஹ்மதியா ஜமா அத்தில் இப்போதும் இது தொடர்ந்துக் கொள்கின்றதா என்பது எனக்கு தெரியாது. ஜமா அத் தொழுகைக்கு ஒருவர் தாமதமாக வந்தால், ‘‘ருக்குஆ’’ நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அவர் வந்தால், அல்லது சமி அல்லாஹீ லீமன் ஹமிதஹ் கூறும்பொழுது அவர் வந்தால், அந்த நபருக்கு சூரா அல்பாத்திஹா இழந்து விட்டது. ஆனால் தாமதமாக வந்த நபர் எண்ணுகின்றார் ‘‘ரக்கா அத்து’’ கிடைத்து விட்டது என்று. ஆனால் உண்மையில் அவருக்கு ‘‘ரக்கா அத்து’’ கிடைக்கவில்லை. காரணம் அவருக்கு சூரா அல் பாத்திஹா கிடைக்க வில்லை என்பதாகும். உதாரணமாக இமாம் நான்கு ரக்கா அத்து தொழுகின்றார் ஏன்று எண்ணுவோம். தாமாதமாக வந்த நபர், முதல் சூரா பாத்திஹா முடிந்த பிறகு ரக்கா

அத்தில் இணைகின்றார். இமாம் ''றுக்கு ஆ'' அல்லது அதற்கு பின் வரும் கட்டத்திலோ எட்டினார். அவ்வாறு இமாம் தனது தொழுகையினை முடித்துக் கொள்கின்றார். தாமாதமாக வந்த நபரும் தனது தொழுகை முழுமைப் பெற்று விட்டது என்ற எண்ணத்தோடு தொழுகை முடித்துக் கொள்கின்றார். ஆனால் தாமாதமாக வந்த நபருக்கு தொழுகை முழுமைப் பெற வில்லை என்பதே உண்மை. காரணம் தாமதாமாக வந்த நபருக்கு நான்கு ரக்கா அத் தொழுகையில் மூன்று ரக்கா அத் மட்டும் கிடைத்துள்ளது. ஏனெனில் அந்த நபருக்கு முதல் ரக்கா அத்தில் அல் பாத்திஹா கிடைக்கவில்லை என்பாதாகும். இந்த ஹதீஸை ஆழமாக படித்துக் கொண்டால் தெரிய வருகின்ற உண்மை, அதாவது சூரா பாத்திஹா இல்லாமல் ஒரு ரக்கா அத் தொழுதால் அக் காரணத்தால் அவருக்கு தொழுகை முழுமைப் பெற வில்லை என்றாகும். அதனால் உங்களுக்கு பாத்திஹா இழக்க நேர்ந்தால் இமாம் ''றுக்கு ஆல் எட்டிவிட்டால் நீங்கள் உங்களுக்கு இழக்கப்பட்ட ரக்காத்தை முழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதே தொழுகை பரி பூரணமாகுவது. ஏனெனில் சூரா அல் பாத்திஹா மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. இமாம் ''றுக்கு ஆ'' கட்டத்தில் எட்டுவதற்கு முன் தாமதமாக வருகின்ற நபருக்கு இமாம் பாத்திஹாவுக்கு பிறகு மற்று வசனங்கள் ஓதி கொண்டிருக்கும் வேளைகளில் தாமதமாக வந்த நபர் பாத்திஹா திடீரென ஓதி ரக்கா அத்தை முழுமைப்படுத்திக் கொள்ள முடியும். அப்படி தொழுகை பூரண மாகி விடவும் செய்யும்.
2. இமாம் சூரா அல் பாத்திஹா சத்தமாக ஓதிக் கொண்டிருக்கும் வேளையில் பின் நிற்பவர்கள் சூரா அல் பாத்திஹா சிறிய சத்தத்தில் ஓதி கொள்ளவோ அல்லது மனதில் ஓதிக் கொள்ளவோ வேண்டும். இமாம் சூரா பாத்திஹாவுக்கு பிறகு மற்று குர் ஆன் வசனங்கள் ஓதிக் கொள்ளும் போது நம்பிக்கையாளர்கள் கவனத்துடன் கேட்டு நிற்கவும் வேண்டும்.

**அல்ஹும்த்:-** புகழ். நன்றியை விட சிறந்தது. அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிப்பது நல்லதேயாகும். ஆனால் அல்லாஹ்வுக்கு மட்டுமே புகழ் என கூறுவது அதை விட சிறந்ததாகும்.

**லீல்லாஹி:-** அல்லாஹ்வுக்கு மட்டும் சேர்ந்தது. காரணம் அவன் அனைத்தையும் படைத்தவன் ஆவான்.

**ரப்பி :-** இரட்சகன், படைக்கின்றவன், வாழ வைக்கின்றவன், உணவு வழங்குகின்றவன், உயிரை எடுத்துக் கொள்பவன், மரணத்திற்கு பிறகும் உயிரை கொடுப்பவன், விதி கூறுகின்றவன், பிரதி பலன் வழங்குகின்றவன், தண்டனைத் தர கூடியவன்.

**அல் ஆலமீன் :-** உலகங்கள், அல் ஆலம் என்ற வார்த்தையின் பன்மை சொல் ஆகும்.

**ரப்பில் ஆலமீன்:-** அனைத்து உலகினுடையவும் நாதன். அதாவது மனு உலகம், மலக்கு உலகம், ஜீன் உலகம், விலங்கு உலகம் தாவர உலகம், தாது உலகம். அல்லாஹ் எல்லா படைப்பினங்களுடையும் நாதன் ஆவான். எந்த இடத்திலும் எந்த சமயத்திலும் படைப்பினங்களுக்கு அல்லாஹ்வன்றி மற்றொரு நாதன் இல்லை. உயிருள்ளதும் உயிரற்றதுமான அனைத்தும் வகைகளின் நாதன் அவனே ஆவான். அனைத்து விஷயங்களுக்கு மீது அதிகாரம் அவனுக்கே ஆகும்.

**ஆல் ரஹ்மானிரஹீம் :-** அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். எல்லாம் வல்ல அல்லாஹ் மன்னிப்பு அளிப்பவன். நேசமுடையவன். ஆனால் நாம் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும், அல்லாஹ் கணக்கு கேட்பதில் மிக கவனமுடையவன் ஆவான். கடினமான தண்டனை அளிப்பவனும் ஆவான்.

ஒரு குத்சியான ஹதீஸில் தூதுவ மன்னன் ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்கின்றார். **அல்லாஹ் அளிக்க கூடிய தண்டனைகளின் முறையைக் குறித்து ஒரு நம்பிகையாளர் புரிந்திருப்பின், அவன் சொர்க்கத்தில் பிரவேசிப்பான் என்று எவ்வித எதிர் பார்ப்பும் வைத்துக் கொள்ள மாட்டான். மாறாக ஒரு நம்பிளையாளர்**

**அல்லாஹுவுடைய கருணையின் உண்மை நிலையை புரிந்திருப்பின், அல்லாஹ்வில் இருந்து மன்னிப்பு கிடைக்கும் என்ற எதிர் பார்ப்பும் கைவிட்டுக் கொள்ள மாட்டான்** (முஸ்லீம்)

**மாலீக் :-** உரிமையாளர்

**யவ்மித்தீன் :-** விதி நாளின் உரிமையாளர். அவன் நாடுகின்றவர்களுக்கு மன்னிப்பு வழங்குகின்றான். அவன் நாடுகின்றவர்களுக்கு பிரதிபலன் வழங்குகின்றன். அவன் நடுகின்றவர்களுக்கு தண்டனை அளிக்கின்றான். ஒரு நீதிபதியை விட மிக உயர்ந்த பதவில் ஆவான் அவன். ஒரு பாவிக்கு கூட மன்னிப்பு வழங்கிக் கொள்ள அவனுக்கு முடியும். ஆனால் அந்த பாவி “சீர்க்கு” செய்வதில் இருந்து விலகி நிற்க வேண்டும் என்று மட்டும். விதி நாள் என்பது ஒரு தினம் ஆகும். அன்று இறைவன் முன் நாம் அனைவரும் ஆஜர் ஆக வேண்டும். அன்று நாம் இவ்வுலகில் வைத்துச் செய்த அனைத்து செயல்களுக்கும் பாதிலளிக்க வேண்டும்.

**இயாக்க நவ்துபு வஇயாக்க நஸ்த இஎன் :-** உன்னை மட்டும் நாங்கள் வணங்குகின்றோம். உன்னிடம் மட்டும் நாங்கள் உதவி தேடுகின்றோம். அல்லாஹ் அவனது அபாரமான ஞான ஆற்றல்களால் கால கட்டங்கள் தோறும் ஏராளமான இறை தூதர்களை நியமித்துக் கொண்டிருந்தான். அவர்களில் சிலர்களுக்கு வேத நூல்கள் அவன் வழங்கினான். அதாவது ஹஸ்ரத் இப்பிராஹீம் நபி (அ) அவர்கள் ஒரு ஏடுமாக தோன்றினார். ஹஸ்ரத் தாவூது நபி (அ) அவர்கள் சங்கீதம் என்ற நூலுடன் வந்தார். ஹஸ்ரத் மூஸாநபி (அ) அவர்கள் தௌராத்துமாக அவதரித்தார். சிறு காலத்திற்கு பிறகு ஹஸ்ரத் ஈசாநபி (அ) அவர்கள் இஞ்சிலுமாக தோன்றினார். முடிவில் ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்கள் திரு குர் ஆனுமாக வந்தார்.

முஸலீம்களும் கிறிஸ்தவர்களும் இப்போது எதிர் பார்த்திருக்கும் ஈசாநபி (அ) அவர்கள் இஞ்சிலுமாக வந்தார். அவர் ஒரு தடைவை கூட வருவார் என்று எண்ணுவோம். அவர் வரும் பொழுது எந்த வேத நூலை பின்பற்றுவர், எந்த வேத நூலை குறித்து மக்களை கற்பிப்பார். இஞ்சிலயா அல்லது குர் ஆனையா? அவருக்கு இறக்கப்படாத வேத நூலை மக்களுக்கு கற்பிப்பாரா அல்லது இறைவனில் இருந்து அவருக்கு இறக்கப்பட்ட நூலை மக்களுக்கு கற்பிப்பாரா?.

எல்லா இறை தூதர்களுடையவும் பொது செய்தி இறை நூல்களில் உண்டு. அந்த அனைத்து இறை நூல்களுடையவும் செய்தி திரு குர் ஆனில் உட்பட்டிருக்கின்றது. குர் ஆனின் செய்தி சூரா அல் பக்கராவில் உட்பட்டிருக்கின்றது. சூரா அல் பக்கராவின் செய்தி, சூரா அல் பாத்திஹாவில் உட்பட்டிருக்கின்றது. சூரா அல் பாத்திஹாவின் செய்தி **“இயாக்கா நஆபுது வா இயாக்கா நஸ்தயீன்”**-ல் உட்படுகின்றன. அல்லாஹ்வின் ஏகத்துவமாகும் இந்த வசனம். அவனது பெயர்களிலும் அவனது பண்புகளிலும் அவன் முதல் மையானவன். பாதுகாவலன் என்ற நிலையிலும் அவனுக்கே முதல் இடம். அவனது இறை தன்மைக்கு நிகறில்லை. அல்லாஹ் அல்லாமல் வேறொரு இறைவனும் இல்லை.

அல்லாஹ்வின் எகத்துவத்தில் ஒருவருக்கு நம்பிகை உண்டு என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவனது பெயர்களிலும் தன்மைகளிலும் நம்பிகை உண்டு என்பதால் மட்டும் ஒருவர் முஸ்லீம் ஆகுவதில்லை என்பதே உண்மை. அல்லாஹ் ஏகன் என்றும் அவன் இரட்சகன் என்றும் நம்பிகைக் கொண்டோம் என்பதாலும் ஒருவர் முஸ்லீம் ஆகுவதில்லை. இறைவன் என்ற நிலையில் அல்லாஹ் ஏகன் என்ற நம்பிகை நிபந்தனைகளுக்கு அப்பர்ப்பட்ட நிலையில் இருக்கவேண்டும்.

நமது தேவைகள் அனைத்தும் அல்லாஹ்விடமே தேடிக் கொள்ள வேண்டும் என்பது தவிர்த்துக் கொள்ள இயலாத விஷயமாகும். ஆகவே அல்லாஹ்விடத்தில் நேரடியாகவே நமது மன்றாடுதலையும் பிரார்த்தனையையும் சமர்ப்பித்து கொள்ள வேண்டும். காத்த முன் நபியீன் ஆன ஹஸ்ரத் முஹமது முஸ்தபா (ஸல்) அவர்கள் நம்மை கற்பித்ததும் அது வேயாகும்.

உண்மையான இரட்சகன் அல்லாஹ் என்று நம்பிகை கொள்கின்ற ஏராளமான மக்கள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் அல்லாஹ்வுக்கு இணையையும் வைத்துக் கொள்கின்றார்கள். அல்லாஹ்வை கூடாமல் அவர்கள் மற்றவைகளையும் வணங்கி கொள்கின்றார்கள். அதனால் அவர்கள் “சீர்க்கில்” அகப்பட்டு விட்டனர். அவர்கள் அம்முஸ்லீமாக பரிணமிக்கின்றன. காரணம் அவர்கள் அல்லாஹ் அல்லாதவைகளையும் வணங்குகின்றார்கள். அந்த நிலையில் அவர்கள் பாவ மன்னிப்பு தேடவில்லை என்றால், அதற்காக அவர்கள் மன்றாடிக் கொள்ளவில்லை என்றால், அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு மன்னிப்பு கிடைத்து விட வில்லை என்றால், சீர்க்கு அவர்களை நகரத்திற்கு எட்ட வைத்துக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

இன்ஷா அல்லாஹ்! நேரக் குறைவு காரணத்தால் நான் இதை நிறைவுப் படுத்திக் கொள்கின்றோன். வருகின்ற வெள்ளிக்கிழமையும் இவ்விஷயத்தை தொடர்ந்து பேசுவோன். சீர்க்கில் இருந்து அல்லாஹ் நம்மை இரட்சிப்பனாக! நமது வாழ்கை முழுவதும் களங்க மற்ற முஸ்லீம்களாக செயல்பட அல்லாஹ் உதவி புரிவானாக! அவன் மட்டும் ஒரேயொரு லட்சியம்! உலக மக்களை இஸ்லாமின் பால் அழைத்துக் கொள்வதே நமது கடமை. அக்கடமையை நமக்கு நிறைவேற்றுவோம். குர் ஆனுடையவும் சூரா அல் பாத்திஹாவுடையவும் மேன்மையும் தூய்மையும் ஆன பலன் உலகிற்கு கிடைத்து விடட்டும். ஆமீன்


**Issued by**
Jamaat Ul Sahih Al Islam
*Dawa Department*
Tamil Nadu (Regd.No: A/693)
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

*Translated by*
**Azim Ahmad**
*Sadr Sahibul Faraj*
Kerala/Tamil Nadu
**Cell:** 9947181650
9789180817